दक्षिण रेलवे/Southern Railway
चेन्नै मंडल/Chennai Division

No.PUB/MAS/2021/04/01 Date:01.04.2021

प्रेस विज्ञप्ति /PRESS RELEASE

**CHENNAI DIVISION CREATES A NEW MILESTONE OF HIGHEST EVER AUTOMOBILE LOADING IN A MONTH DURING MARCH 2021**

Chennai Division of Southern Railway surpasses its record made during February 2021 recording its highest ever automobile loading in a month during March 2021. Chennai Division has achieved loading of automobile consignment to a total of 74 rakes and has generated a revenue of Rs.17.77 Crore during March 2021.

During the month of March 2021, Chennai Division has dispatched 74 rakes, in which 21 rakes were dispatched from Walajabad goods shed and 53 rakes from and Melpakkam goods shed. The automobile consignments were loaded in 1,923 wagons earning a total revenue of Rs.17.77 Crores. This is the highest ever both in revenue and rakes handled in a single month during the financial year 2020-2021.

This record has surpassed the loading made during February 2021 which handled 64 rakes in a month, which is said to be the second highest ever automobile loading in a month during the financial year 2020-2021. Out of these 64 rakes, Walajabad goods shed handled 21rakes and Melpakkam goods shed has handled 43 rakes. A total of 1,675 wagons were loaded earning a revenue of Rs.15.58 Crores.

The third highest automobile loading was recorded during November 2020 handling a total of 59 rakes, Walajabad goods shed – 23 rakes and Melpakkam goods shed – 36 rakes. A total of 1,544 wagons were loaded with brought a total revenue of Rs. 14.50 Crores.

Inspite of the pandemic and resultant lockdown, Chennai Division has surpassed its 2019-20 performance in the loading of automobiles by 24%, generating revenue of Rs.117 Crore from transportation of automobiles during the financial year 2020-21 as against Rs.98 Crore revenue earned during the previous financial year 2019-20.

Chennai Division operates automobile loading from its two major goods yards namely Walajabad goods shed and Melpakkam good shed. These two goods shed serves as an automobile hub for the industries situated in and around Chennai. The upgraded goods shed with much more facilities have drawn the attention of automobile firms and service providers to export their automobile consignment to other parts of the country.

During January 2021, ie., on 12.01.2021, Chennai Division dispatched its first automobile consignment to Nepal via Uttar Pradesh. A total of 125 cars of M/s Hyundai were moved by M/s IVC logistics Limited in NMG rake of 25 wagons from Walajabad to Nautanwa, Uttar Pradesh which is a closer to Nepal Border. This stands testimony to the concerted efforts of Chennai Division in boosting Automobile traffic.

**Sd/-**

**ए .एलुमलै/ (A.Elumalai)**

**जनसंपर्कअधिकारी / Public Relations Officer**

**चेन्नैमंडल/Chennai Division**

**Follow us**
www.sr.indianrailways.gov.in/index.jsp
https://twitter.com/DrmChennai

**சென்னை கோட்டம்**
**தெற்கு ரயில்வே**

No.PUB/MAS/2021/04/01 Date - 01.04.2021

## <u>செய்தி வெளியீடு</u>

**ஆட்டோமொபைல் சரக்குப் போக்குவரத்தில் சென்னை ரயில்வே கோட்டம் புதிய சாதனை**

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் மார்ச் 2021-ல், ஆட்டோமொபைல் சரக்கு போக்குவரத்தில் தனது முந்தைய சாதனையை விஞ்சியுள்ளது. கடந்த 2021 மார்ச் மாதத்தில் சென்னை ரயில்வே கோட்டம், முன்னெப்போதுமில்லாத வகையில் அதிகபட்சமாக 74 சரக்கு ரயில்களை இயக்கியுள்ளது. இதன் மூலம் ரூ .17.77 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

2021 மார்ச் மாதத்தில் சென்னை ரயில்வே கோட்டம் 74 சரக்கு ரயில்களை ஆட்டோமொபைல் ஏற்றுமதிக்கான இயக்கியுள்ளது. இதில் 21 ரயில்கள் வாலாஜாபாத் சரக்குக் பணிமனையிலிருந்தும், 53 ரயில்கள் மேல்பாக்கம் சரக்கு பணிமனையிலிருந்தும் இயக்கப்பட்டன. இந்த ஆட்டோமொபைல் சரக்கு போக்குவரத்து மூலம் ஈட்டப்பட்ட வருவாய் ரூ .17.77 கோடி ஆகும். மொத்தம் 1,923 வேகன்களில் ஆட்டோமொபைல் சரக்குகள் ஏற்றப்பட்டன. 2020-2021 நிதியாண்டில் ஒரே மாதத்தில் கையாளப்பட்ட ஆட்டோமொபைல் போக்குவரத்துக்கான சரக்கு ரயில்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் ஆகியவனவற்றுள் இதுவே மிக அதிகமானதாகும்.

இதுவரை பிப்ரவரி 2021ல் கையாளப்பட்ட 64 சரக்கு ரயில்களே இந்த 2020-2021 நிதியாண்டில் ஒரு மாதத்தில் இயக்கப்பட்ட சரக்கு ரரயில்களுக்கான அதிகபட்ச எண்ணிக்கையாக கருதப்பட்டது. இந்த சாதனையை சென்னை ரயில்வே கோட்டம் 2021 மார்ச் மாதத்தில் முறியடித்துள்ளது. காரணம்,, பிப்ரவரி 2021-ல் மொத்தம் 64 சரக்கு ரயில்கள் இயக்கப்பட்டன. இதில் வாலாஜாபாத் சரக்கு பணிமனையிலிருந்து 21 ரயில்களும், மேல்பாக்கம் சரக்கு பணிமனையில் இருந்து 43 ரயில்கள் மட்டுமே இயக்கப்பட்டன. மொத்தம் 1,675 பெட்டிகளை கொண்ட இந்த 64 சரக்கு ரயில்கள் இயக்கப்பட்டது மூலம் ரயில்வே துறைக்கு 15.5 8 கோடி வருவாய் கிடைத்தது.

இந்த வரிசையில் 2020 நவம்பர் மாதத்தில் இயக்கப்பட்ட சரக்கு ரயில்கள் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. இந்த மாதத்தில், மொத்தம் 59 சரக்கு ரயில்கள் இயக்கப்பட்டன. இதில் வாலாஜாபாத் சரக்கு பணிமனையிலிருந்து 23 ரயில்களும், மேல்பாக்கம் சரக்கு

பணிமனையிலிருந்து 36 ரயில்களும் இயக்கப்பட்டன. மொத்தம் 1,544 பெட்டிகள் இந்த 59 சரக்கு ரயில்கள் மூலம் இயக்கப்பட்டதன் விளைவாக ரூபாய் 14.50 கோடி வருவாய் சென்னை ரயில்வே கோட்டம் ஈட்டியது.

கொரோனா நோய் தாக்கம் மற்றும் நோய் பரவல் அச்சுறுத்தல் இருந்துவந்த போதிலும், சென்னை ரயில்வே கோட்டம் கடந்த 2019-20 நிதியாண்டில் ஈட்டிய மொத்த வருவாயான ரூபாய் 98 கோடியைவிட 24 % உயர்ந்து ரூபாய் 117 கோடி வருவாயை ஆட்டோமொபைல் சரக்கு போக்குவரத்து மூலம் இந்த நிதியாண்டு 2020-21 பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆட்டோமொபைல் சரக்கு போக்குவரத்திற்கு என்ன வாலாஜாபாத் சரக்கு பணிமனை மற்றும் மேல்பாக்கம் சரக்கு பணிமனை என இரண்டு முக்கிய பணிமனைகள் சென்னை கோட்டத்தில் இயங்கி வருகிறது. இந்த இரு பணிமனை களும் சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இயங்கி வரும் கார் தொழிற்சாலைகளுக்கு ஒரு முக்கிய ஆட்டோமொபைல் சரக்கு முனையமாக இயங்கி வருகிறது. மறுசீரமைக்கப்பட்ட மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இந்த ஆட்டோமொபைல் சரக்கு பணிமனைகள் கார் தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் ஆட்டோமொபைல் பொருட்கள் ஏற்றுமதியாளர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்துள்ளது.

கடந்த 2021 ஜனவரி 12 அன்று, சென்னை ரயில்வே கோட்டம் முதன்முறையாக ஆட்டோமொபைல் சரக்குகளை அண்டை நாடான நேபாளத்திற்கு, உத்தரபிரதேச மாநிலம் வழியாக தனது சரக்கு ரயிலை இயக்கியது. மொத்தம் 25 பெட்டிகளைக் கொண்ட ஒரு சரக்கு ரயிலை வாலாஜாவில் இருந்து உத்தரபிரதேசம் மாநிலத்தில் உள்ள நேபாள எல்லைக்கு அருகிலுள்ள நவ்தன்வா என்ற இடத்திற்கு 125 ஹூண்டாய் கார்களை ஐ.வி.சி லாஜிஸ்டிக்ஸ் நிறுவனம் மூலமாக அனுப்பியது. ஆட்டோமொபைல் போக்குவரத்தை அதிகரிப்பதில் சென்னைப் பிரிவின் ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு இதுவே சான்றாகும்

**Sd/-**
**அ. ஏழுமலை**
**மக்கள்தொடர்புஅதிகாரி**
**சென்னைகோட்டம்**